**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.60/2013**
**Prosecution Witness P.W.11**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. முருகன் | Calling | : விவசாயம் |
| Father's name | : திரு. சேதுராமன் | Religion | : இந்து |
| Village | : அச்சம்பட்டி | Age | : 53 |
| Taluk | : வாடிப்பட்டி, மதுரை | | |

நாள் - **15.09.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

எனது சொந்தஊர் அச்சம்பட்டி. நான் விவசாயம் செய்து வருகிறேன். என் உடன் பிறந்த சகோதரிகள் இரண்டு பேர். இந்த வழக்கில் இறந்து போன சுதர்சன் எனது முதல்சகோதரி தழிழ்மலரின் மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேன், அவர்களை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்து போன சுதர்சனுடன் ஆஜர் எதிரிகள் ஒன்றாக சுற்றுவார்கள். கடந்த 21.12.2010ம் தேதியன்று மாலை சுமார் 3.00 மணியளவில் நான் என் சகோதரி வீட்டிற்கு போய்விட்டு ஒத்தக்கடை ஜங்சனுக்கு வந்த போது, சுதர்சன், தர்மன், சுந்தரபாண்டி, காட்டுவாஒலி ஆகியோர்கள் ஒரு ஆட்டோவில் சென்றார்கள். ஆட்டோ பதிவெண் தற்சமயம் நினைவில்லை. அவர்கள் சென்றதை நேரில் பார்த்தேன். என் அக்கா பையன் சுதர்சனை வீட்டிற்கு போ என்று சொன்னேன். நான் எனது ஊருக்கு வந்துவிட்டேன். அன்று இரவு என் சகோதரி தமிழ்மலர் எனக்கு போன் செய்து, தன் மகன் சுதர்சன் வீட்டிற்கு வரவல்லை என்று சொன்னார். நான் அவன் எங்கேயாவது சுற்றிவிட்டு வீட்டிற்கு வந்துவிடுவான் என்று சொன்னேன். அன்று இரவு சுதர்சன் வீட்டிற்கு வரவில்லை. மறுநாள் காலையிலும் என் சகோதரி தன் மகன் வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னார். நானும், என் அக்காவும் ஒத்தக்கடை ஆட்டோ ஸ்டாண்டில் போய் தேடினோம். சுதர்சன் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை. போலிசில் இதுசம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. மறுநாள் டிவியில் வந்த செய்தியை பார்த்த போது, கருப்பாயூரணி பாண்டி கோவில் அருகே அடையாளம் தெரியாத ஆண் பிணம் இருப்பதாக சொன்னார்கள். அதை பார்த்து

விட்டு, மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று நானும், என் சகோதரியும் அந்த பிரேதத்தை பார்த்தோம். அங்கு பிரேதமாக இருந்தவரை என் அக்காவும் அடையாளம் காண்பித்து, பார்த்து அவர்கையில் இருந்த அமர் என்ற பச்சை குத்தியிருந்ததை பார்த்து என் மகன் சுதர்சன் என்று சொன்னார். நானும் பிரேதத்தை பார்த்தேன், அது சுதர்சன் என்று தெரிய வந்தது. இதுசம்பந்தமாக கருப்பாயூரணி போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையில் சுதர்சனை நான் அடையாளம் காண்பித்த இரண்டு நாட்களுக்கு முன்பு சுந்தரபாண்டி, தர்மர், காட்டுவாஒலி ஆகியோர்களுடன் ஆட்டோவில் போனதாகவும், அவர்களை ஒத்தக்கடையில் வைத்து பார்த்ததாகவும் சொன்னேன். சுதர்சனை கூட்டி சென்ற நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்.

குறுக்குவிசாரணை - இல்லை (எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.16 10:18:06 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.